**தலைப்பு 273 – புத்தளம் மாவட்ட செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

புத்தளம் மாவட்ட செயலகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் புத்தளம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை சுங்கத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான புத்தளம் மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தால் வருடாந்தம் மற்றும் உரிய காலத்தில்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை வழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்

மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) புத்தளம் மாவட்ட செயலகத்தால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்காமை.

2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்தேவைப்பாடுகளை மீறிய சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சிபார்சு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 8.2 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியற்ற சொத்துக்கள் இருக்குமாயிருந்தால் அவற்றை உரிய முறைப்படி இனங்கண்டு கிரயத்தை அல்லது கிரயத்தை இனங்காண முடியாதிருந்தால் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியை கணக்கீடு செய்ய | 267/2018 ஆம் இலக்க 2018 நவம்பர் 21 ஆந் திகதிய சுற்றறிக்கையின் 8.2 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இதற்கான வாகனங்களில் இடர் முகாமைத்துவ நிலையம், தேசிய நிவாரண சேவைகள் நிலையம் என்பவற்றால் வழங்கப்பட்ட 33 வாகனங்களும் காணப்பட்டதுடன் அவற்றின் உரிமைகள் மாவட்ட செயலகத்திற்கு இன்னும் ஒப்படைக்கப்படாதானால் உரிய விபரம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு வழங்கிய வாகனங்கள் தொடர்பாக உரிமைகளை உறுதிப்படுத்திக் கொண்டு கணக்கீடு |

| | | |
|---|---|---|
| வேண்டிய போதிலும் 06 வாகனங்கள் மற்றும் 42 உழவு இயந்திரங்களும் லொறி பவுசர்களும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**1.6.2 நிதி நிலைமைக் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ரூபா 7,095,291 பெறுமதியான 07 வாகனங்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்தும் அவ்வாகனங்களின் கிரயத்தை ஏடுகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய பெறுமதியை ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தவறுதலாக 2018 ஆம் ஆண்டிற்கான ஏடுகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) மீளாய்வாண்டின் போது நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 260,746,714 தொகையான அலுவலக கட்டிடங்களின் பெறுமதி நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேற்கொள்ளப்பட்ட கிரயம் மாத்திரம் மூலதனச் செலவுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 267/2018 ஆம் இலக்க 2018 நவம்பர் 21 ஆந் திகதிய சுற்றறிக்கையின் 8.2 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கட்டிடங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதனைத் தெரிவிக்கிறேன். இக் கட்டிடங்களின் செலவுகள் மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டது. உரிய பெறுமதி எனது டிஎஸ்பீ/ஏசீசீ/11/01/04 ஆம் இலக்க 2019 சனவரி 09 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் பிரதேச செயலகத்திற்கு தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டிற்கான முழுமையான கணக்குப் பொழிப்புக்களின் மூலம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதனைத் தெரிவிக்கிறேன். |
| (இ) நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றின் பிரகாரம் (ஏசீஏ – 6) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலையான சொத்துக்களின் பெறுமதிகளுக்கும் திறைசேரி கணனி அச்சுப் பிரதி பெறுமதிகளுக்குமிடையே இணக்கமின்மைகள் வெளிப்படுத்தப்பட்டன. | நிதியற்ற சொத்துக்கள் கூற்றினதும் திறைசேரி அச்சுப் பிரதியினதும் பெறுமதிகளுக்கிடையேயான வித்தியாசம் இனங்காணப்பட்டு சரி செய்வதற்காக தேவையான செம்மையாக்கல்கள் செய்யப்படுதல் வேண்டும். | 04 பிரதேச செயலகங்களால் உள்ளடக்கப்பட்ட தரவுகள் (திறைசேரியின் பன்முகப்படுத்தப்பட்ட கணக்குகள் முறைமைக்கு) பிழையானதாக இருந்ததனால் இந்த வித்தியாசம் உருவாகியுள்ளது. இதனை சரி செய்வதற்காக DSP/ACC/8/Asset ஆம் இலக்க 2019 மார்ச் 05 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் நாட்குறிப்புக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 மீண்டு வரும் செலவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| முறைப்படியாக மதிப்பீடுகள் தயாரிக்கப்படாததன் காரணமாக 12 மீண்டுவரும் செலவு விடயங்களுக்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 15 மில்லியன் நி.பி 66 மற்றும் 69 களின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் ஏனைய செலவு விடயங்களுக்காக மாற்றம் செய்யப்பட்டிருந்தது. | தேவைப்பாடு தொடர்பாக முறையான மற்றும் போதியளவான மதிப்பீடு செய்யப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும். | சேமிப்புக்கள், ஏற்பட்டுள்ள செலவு விடயங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்டவாறு செலவுகள் இடம் பெற்றிருக்காததன் காரணமாக அவ்வாறு சேமிப்புக்கள் மாற்றப்பட்டிருந்தன. |

### 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்ககூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| 07 ஊழியர்களிடமிருந்து மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிட வேண்டியிருந்த ரூபா 447,152 கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் பணத்தை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | கடன் மீதியை பதிவழிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

### 2.3 கணக்காய்வு சான்றுகள் இல்லாமை.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| 19 வாகன விபத்துக்களுக்குரிய கோவைகள் மாவட்ட செயலகத்தில் இல்லாததன் காரணமாக ரூபா 1,318,233 கூட்டு மொத்தமான நட்டங்கள் தொடர்பாக திருப்திகரமாக சான்றுறுதி செய்யமுடியாதிருந்தது. | முறையான பரிசோதனைகளை மேற்கொண்டு பொறுப்பான உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக தேவையான நடவடிக்கை எடுத்தல். | உரிய கோவைகள் தொடர்பாக தேடிப்பார்ப்பதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. குழு அறிக்கைகளின் பின்னர் தகவல்களை கணக்காய்விற்குச் |

சமர்ப்பிப்பேன்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | புத்தளம் மாவட்ட செயலகத்தின் மூலம் அமுல்ப்படுத்தப்பட்ட நவகத்தேகம மற்றும் கருவலகஸ்வெவ பிரதேச செயலகக் கட்டிடங்களை நிர்மாணிக்கும் போது உரிய செயற்திட்டங்களுக்கான மொத்த கிரய மதிப்பீட்டினைத் தயாரிக்காது செயற்திட்டம் பல கட்டிடங்களின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. முதலாவது கட்டத்தின் கீழ் கட்டிடத்தின் தள மாடியின் டைல் வேலைகளும் வர்ணம் பூசுதல் வேலைகளும், மேற்கொள்ளப்பட்டிருந்தும் இறுதிக் கட்டம் அளவில் அந்த டைல்களும் பூசப்பட்ட வர்ணங்களும் அழுக்கடைந்து காணப்பட்டது. | நிர்மாணச் செயற்திட்டத்திற்காக முழுமையான மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும். | எதிர்காலத்தில் முழுக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு செயற்திட்டம் ஆரம்பிக்கப்படும் |
| (ஆ) | கருவலகஸ்வெவ பிரதேச செயலகத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தக்காரர்களுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள உடன்படிக்கைகளின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் நிர்மாணங்கள் மேற்கொள்ளாமைக்காக ரூபா 60,000 தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தொழில்நுட்ப உத்தியோகத்தரின் சிபார்சின் பிரகாரம் 2018 நவம்பர் 07 ஆந் திதகிய கடிதத்தின் படி 34 நாட்கள் கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. |
| (இ) | ரூபா 21,574,425 மதிப்பீட்டுப் பெறுமதியான கருவலகஸ்வெவ பிரதேச செயலகக் கட்டிடத்தை நிர்மாணிக்கும் முதலாவது கட்டத்திற்கான கேள்விகளைக் கோருவதற்காக பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.2.2 ஆம் பிரிவின் பிரகாரம் கேள்வி கோரும் ஆகக் குறைந்த காலமாக 21 நாட்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும் 12 நாட்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.2.2 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பெறுகை நடைமுறைகளுக்குரிய நிர்மாணங்களுக்காக ஆண்டில் எஞ்சியுள்ள காலத்தை கவனத்தில் கொண்டு கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்காக உரிய நாட்களை வழங்குவதற்கு பெறுகைக் குழு தீர்மானித்துள்ளது எனத் தெரிவிக்கிறேன். |
| (ஈ) | 2018 யூலை 24 ஆந் திகதிய பெறுகைக் குழுத் தீர்மானத்தின் அடிப்படையில் மாவட்ட செயலகத்தின் மூலம் அமுல்ப்படுத்தப்பட்ட புத்தளம் களப்பு பூங்காவின் (விகாரைக்கு அருகில்) | அரசாங்கத்தின் பணத்தை விளைதிறனாகப் பயன்படுத்தக்கூடிய வகையில் | களப்பு கரையோர பூங்கா காணியில் அத்துமீறிக் குடியிருந்த குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கு நீதிமன்ற |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாண நடவடிக்கையானது ரூபா 5,926,558 ஒப்பந்த பெறுமதிக்கு ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும், மேற்கூறிய நிர்மாண நடவடிக்கை தற்பொழுது அபிவிருத்தி செய்யப்பட்டு இறுதிப் பகுதியிலிருந்து பிரிக்கப்பட்ட கட்டமாக அமுல்ப்படுத்தப்படுவதனால் இச் செயற்திட்டத்தின் பொருத்தத்தன்மையையும் விளைதிறனும் கணக்காய்வின் போது சச்சரவுத் தன்மையானதாக இருந்தது. | செயற்திட்டங்கள் திட்டமிடப்படுதல் வேண்டும். | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததனால் கரையயோரக் காணிகள் முழுவதையும் ஒரே தடவையில் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது. |
| (உ) | மாவட்ட செயலகத்தின் மூலம் அமுல்ப்படுத்தப்பட்ட உடப்பு பொலிஸ் நிலையத்திற்க அருகாமையிலிருந்து சின்ன கொளனி வரையான வீதிக்கு காபட் இடுவதற்கான ஒப்பந்தம் ரூபா 14,075,523 ஒப்பந்த பெறுமதிக்கு ஒப்பந்தகாரர்களிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உரிய வீதியினை அபிவிருத்தி செய்யும் போது 2015 ஆம் ஆண்டில் புத்தளம் பிரதேச செயலகத்தின் மூலம் ரூபா 976,747 செலவு செய்து கொங்கரீட் இடப்பட்டிருந்த 92.5 மீற்றர் அளவும் உரிய செயற்திட்டத்திற்குள் உள்ளடக்கும் வகையில் மேற்கூறிய மதிப்பீட்டினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்ததன் காரணமாக முன்னைய ஆண்டில் செலவு செய்த அரசாங்கத்தின் செலவு விளைவற்ற செலவாக இருந்தது. | அரசாங்கத்தின் பணத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்தும் வகையில் செயற்திட்டத்தை திட்டமிடுதல் வேண்டும். | இந்த வீதிக்கு காபட் இடும் போது உடைந்து காணப்பட்ட கொங்ரீட் இடப்பட்ட பகுதியையும் சேர்த்து காபட் இடுமாறு பிரதேச மக்களும் அரசியல் வாதிகளும் வேண்டிக்கொண்டார்கள் என தெரிவிக்கிறேன். |
| (ஊ) | 12 ஆம் இலக்க பெறுகைத் தீர்மானம் தொடர்பாக புத்தளம் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளரும் கணக்காளரும் பெறுகைக் குழுத் தலைவர் மற்றும் குழு அங்கத்தவராகச் செயற்பட்டிருந்தனர். எனினும், அந்த உத்தியோகத்தர்கள் வெளிக்கள கடமையில் ஈடுபட்ட திகதிகளில் பெறுகைத் தீர்மானம் வழங்கியதன் காரணமாக வெளிக்கள கடமைகளுக்காகவும் பறுகைக் குழுத் தீர்மானத்திற்காகவும் ஒரே தடவையில் இரண்டு செயற்பாடுகளுக்காக படிகளாக ரூபா 7,000 மற்றும் ரூபா 70,000 ஆக ரூபா 77,000 செலுத்தப்பட்டிருந்தது. | ஒரே கடமை காலப் பகுதிக்குள் 2 கடமைகளுக்காக படிகள் செலுத்துதல் பொருத்தமற்றதாகும். | இவ்வாறு பெற்றுக்கொண்ட அனைத்து பெறுகைத் தீர்மானங்களும் பெறுகைச் சபையின் மூன்று அங்கத்தவர்கள் கலந்துரையாடி எடுத்த திர்மானமாகும். உரிய திகதிகளில் பிரதேச செயலாளரும் கணக்காளரும் அவசர மற்றும் முன்னுரிமையளிக்க வேண்டிய கடமைகளில் ஈடுபபட்டதன் காரணமாக அலுவலக நேரங்களுக்குப் புறம்பாக பெறுகைச் சபைக் கூட்டங்களைக் கூட்டி தீர்மானம் எடுக்கப்பட்டது. உத்தியோகத்தர்கள் கடமைகளில் ஈடுபடுகின்ற முறைமைகளின் அடிப்படையில் |

| | | |
|---|---|---|
| | | பெறுகைக் குழுவினால் கூட்டுவதற்கு தேவையான நேரங்கள் அலுவலக வேளையில் ஈடுபடுத்துவதற்கு முடியாத சந்தர்ப்பங்கள் காணப்படலாம் அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது பெறுகை நடவடிக்கைகளை தாமதமின்றி செய்யும் தேவைப்பாட்டின் அடிப்படையில் உரிய திகதிகளின் போது அவ்வாறு கூடி பெறுகைத் தீர்மானங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2016 பெப்ரவரி 12 ஆந் திகதி சாரதியின் கவனயீனமான ஓடுதலின் அடிப்படையில் ஒரு கெப் வாகனம் விபத்துக்குள்ளாகி ரூபா 180,500 நட்டம் ஏற்பட்டுள்ளது என்பது தொடர்பான விபத்து சம்பந்தமாக இடம் பெற்ற தொடக்க பரிசோதனை சபை அறிக்கைகளிலிருந்து வெளிப்படுத்தப்பட்ட போதிலும் அந்த நட்டம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களின் பாதுகாப்பு சம்பந்தமாக பொறுப்பான பிரிவு கவனம் செலுத்தல் வேண்டும். | சாரதிகளிடமிருந்து அறவீடு செய்வதற்கு மஹாவெவ பிரதேச செயலகத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. சாரதியினால் மேன்முறையீடும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |

**3.3 நட்டங்களும் சேதங்களும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நி.பி 104(1) இன் பிரகாரம் நட்டங்கள் அல்லது சேதங்கள் ஏற்பட்ட உடன் அதன் அளவையும் காரணத்தையும் உறுதியாகத் தெரிந்து கொள்வதற்கும் அதற்குப் பொறுப்பான நபர்களை உறுதிப்படுத்திக்கொள்வதற்காகவும் விசாரணைகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். எனினும், மாவட்ட செயலகத்தில் 2018 ஆம் ஆண்டில் இடம் பெற்ற 07 வாகன | நிதிப்பிரமாணம் 104(1) இன் பிரகாரம் தொடக்க விசாரணைகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணக்காய்வினால் அக் குறைபாடு சுட்டிக்காட்டப்பட்டதன் பின்னர் விசாரணைச் சபை நியமிக்கப்பட்டு நி.பி 104(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | விபத்துக்கள் சம்பந்தமான விசாரணைகள் நடாத்தப்படவில்லை. | | |
| (ஆ) | 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் 02 வாகனங்களுக்கு இடம்பெற்ற ரூபா 564,620 தொகையான நட்டங்களுக்கு சாரதிகள் பொறுப்பானவர்கள் என விசாரணைச் சபை அறிக்கைகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த நட்டங்களை 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அறவீடு செய்வதற்கு மாவட்ட செயலகத்திற்கு முடியாதிருந்தது. | உரிய சாரதிகளிடமிருந்து நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஒரு வாகனத்திற்கான நட்டத்தை அறவீடு செய்வதற்கு தேவயையான சிபார்சுகள் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மற்றைய வாகனத்தின் நட்டத்தை சாரதியிடமிருந்து அறவீடு செய்வதற்காக பிரதேச செயலகத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. |

### 3.4 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சிபார்சு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| மாவட்டத்திலுள்ள 71 உத்தியோகபூர்வ இல்லங்களில் 10 இல்லங்கள் பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற நிலையில் காணப்பட்ட போதிலும் அது சம்பந்தமாக முறையான நடவடிக்கைகள் எடுக்காததன் காரணமாக அவை அழிவுக்கு உள்ளாகி விளைவற்றுக் காணப்பட்டது. | உத்தியோகபூர்வ இல்லங்களின் பாதுகாப்பிற்காக முறையான நடைமுறைகள் பின்பற்றுதல் வேண்டும். | நிதி ஏற்பாடுகள் கிடைத்த உடன் இந்த உத்தியோகபூர்வ இல்லங்களை உடைத்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 4. நல்லாட்சி

### 4.1 பொதுமக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| சமூக சேவைகள் திணைக்களத்தின் மூலம் புத்தளம் பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் ஊனமுற்ற 79 நபர்களுக்கு 2018 ஆம் ஆண்டின் போது ஊனமுற்ற படியாக (வாழ்வாதாரம்) ரூபா 2,844,000 செலுத்தப்பட்டிருந்தது. எனினும் உண்மையாக இன்னும் 66 நபர்களுக்கு ஊனமுற்றோர் வாழ்வாதாரம் வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டு காத்திருத்தல் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | பொது மக்களின் தேவைப்பாட்டை விரைவாகப் பூர்த்தி செய்வதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்படுதல் வேண்டும். | காத்திருத்தல் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டு தற்பொழுது 66 நபர்கள் தகைமைபெற்றிருந்தும் நிதி ஏற்பாடு இல்லாததனால் அந்த நலன் பெறுனர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கு முடியாதிருந்தது. ஊனமுற்றோர்களுக்கான தேசிய செயலகத்தினால் அங்கீரிக்கப்பட்டு புதிய நிதி ஏற்பாடு வழங்கப்படுமாக இருந்தால் காத்திருத்தல் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட நலன் பெறுனர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கு முடியுமாக இருக்கும் என தெரிவித்துக்கொள்கிறேன். |

### 3.8 மனித வளங்கள் முகாமைத்துவம்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தில் மற்றும் 16 பிரதேச செயலகங்களில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிரேஷ்ட மட்டத்தில் 15 பதவி வெற்றிடங்களும் மூன்றாம் மட்டத்தில் 29 வெற்றிடங்களும் இரண்டாம் மட்டத்தில் 308 வெற்றிடங்களும் ஆரம்ப மட்டத்தில் 25 வெற்றிடங்களும், காணப்பட்டன. சிரேஷ்ட மட்டத்தின் 15 வெற்றிடங்களில் மேலதிக மாவட்ட செயலாளர் (காணிகள்) உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) ஆகிய பதவிகள் 01 வீதமும் 02 பிரதேச செயலாளர் பதவிகளும், 02 உதவி பிரதேச செயலாளர் பதவிகளும், 02 உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) பதவிகளும், 07 கணக்காளர் பதவிகளும், காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே மாவட்ட செயலகத்திலும் பிரதேச செயலகங்களிலும் அங்கீகரிக்கப்பட்ட 34 தொழில்நுட்ப | அத்தியாவசியமான பதவி வெற்றிடங்களைப் பூரணப்படுத்தி பொது மக்கள் சேவையை தொடர்ச்சியாகவும் ஆக்கபூர்வமாகவும் நிறைவேற்றுதல் வேண்டும். | பதவியணியினர் அறிக்கை மூலம் வெற்றிடங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. |

உதவியாளர் பதவிகளில் 21 வெற்றிடங்களும் அங்கீகரிக்கப்பட்ட 18 உதவி தொழில்நுட்ப உதவியாளர்கள் பதவியில் 10 வெற்றிடங்களும் காணப்பட்டன. பிரதேச செயலாளர் ஆகிய சிரேஷ்ட மட்டத்தில் பதவி வெற்றிடங்கள் காணப்படுவதனால் பொது மக்கள் சேவையை தொடர்ச்சியாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுவதற்கு அதிக தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்பது அவதானிக்கப்பட்டது. தொழில் நுட்ப உத்தியோகத்தர் மற்றும் தொழில் நுட்ப உதவியாளர் வெற்றிடங்களின் காரணமாக நிர்மாணச் செயற்திட்டங்களை உள்ளடக்கிய அபிவிருத்தி நடவடிக்கைகளின் விளைதிறன் மற்றும் தரம் தொடர்பான ஆபத்துக்களும் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.